**கடுவன பிரதேச சபை**
**ஹம்பாந்தோட்டை மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 மார்ச் 27 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந் நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 2019 மே 31 ஆந் திகதியும், விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2019 ஜுன் 07 திகதியும் சபை முதல்வருக்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விவரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து கடுவன பிரதேச சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### (அ) கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்கீட்டுக் குறைபாடுகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டின் போது நிர்மாணிக்கப்பட்டிருந்த சேதனப் பசளை முற்றத்தின் கிரயம் ரூபா 35,584,995 தொகை மிகையாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | நிலையான சொத்துக்கள் சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ii) | பின்வரும் நிலையான சொத்துக்களை மூலதனப்படுத்தி இருக்கவில்லை. | | |

| சொத்துக்கள் விபரம் | பெறுமதி ரூபா. | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| சேதனப் பசளை முற்றத்தின் களஞ்சிய அறை | 1,785,349 | நிலையான சொத்துக்கள் சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

| | | | |
|---|---|---|---|
| | கடுவன வாராந்த சந்தை பொதுக் கழிப்பறை | 1,107,363 | நிலையான சொத்துக்கள் சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய் வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| | 2016, 2017 மற்றும் 2018 ஆண்டு களின் போது காணி ஏல விற்பனைகளின் பிரதேச சபைக்கு சாட்டப்பட்டிருந்த 3 காணிகள் | 300,000 | நிலையான சொத்துக்கள் சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய் வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (iii) | 2011 ஆண்டின் போது நன்கொடை ஒன்றாக கிடைதிருந்த டிரக்டர் மற்றும் 2013 ஆண்டின் போது திண்மக் கழிவுப்பொருள் செயற் திட்டத்திற்காக சாட்டப்பட்டிருந்த 03 ஏக்கர் காணியின் பெறுமதியை பெறுமதி மதிப்பீடு செய்து கணக்கீடு செய்திருக்கவில்லை. | | நிலையான சொத்துக்கள் சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய் வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**(ஆ) கணக்காய்விற்குத் தேவையான எழுத்து மூல சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோ கத்தரின் கருத்துரை |
|---|---|---|
| தேவையான தகவல்கள் சமர்ப்பிக்காமையினால் கூட்டுத் தொகை ரூபா 15,569,888 தொகைக்கான 02 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமான மெய்மையாய்தல் செய்வதற்கு முடியாதிருந்தது. | நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | விரிவான அட்டவணை மற்றும் காலப்பகுப்பாய்வு எதிர்காலத்தில் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

## 1.4 இணக்கமின்மை

### 1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) 1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி | | | |
| விதி 177 | கிரம வர்த்தக தொடர் கட்டிடத்தில் 25 கடைகளை வாடகைக்கு வழங்கும் போது கேள்வி நடைமுறை கடைபிடித்திருக்கவில்லை. | விதியின் பிரகாரம் செயற்பட வேண்டும். | கடைகளின் விண்ணப்ப தாரிகளின் பெயர் பட்டியல் சபைக்கு சமர்ப்பித்து அங்கீகாரத்தை பெற்று முதலமைச்சரின் அங்கீகாரம் பெற்ற பின்னர் இந்த கடைகள் வழங்கப்பட்டிருந்தன. |
| விதி 185 | சபையினால் பேணப்படும் 05 நடைமுறைக் கணக்குகளில் மிகையாகக் காணப்பட்ட மாதாந்த சராசரி மீதிகள் முறையே ரூபா 4,754,631 தொகை, மற்றும் ரூபா 7,075,839 தொகை, ரூபா 2,127,604 தொகை, ரூபா 6,064,573 தொகை மற்றும் ரூபா 651,674 தொகை காணப்பட்ட போதிலும் அதில் ஒரு பகுதியை ஏனும் முதலீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | விதியின் பிரகாரம் செயற்பட வேண்டும். | மிகையாகக் காணப்படும் பணத்தில் ரூபா 7,500,000 தொகை ஊழியர் கடன் மீதிக் கணக்கிற்கு மாற்றப்பட்டு காத்திருக்கும் பதிவேட்டில் காணப்படும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | விதி 193 | பாதீட்டுடன் வரவு மற்றும் செலவு விடயங்களை இணக்கஞ் செய்து மிகைகள் மற்றும் பற்றாக் குறைகள் தொடர்பாக காரணங்களைக் காட்டும் கூற்றொன்று கணக்கு களுடன் சமர்ப்பித்திருக்க வில்லை. | விதியின் பிரகாரம் செயற்பட வேண்டும். | பாதீட்டு மற்றும் உள்ளவாறான தகவல் களை இணக்கஞ் செய்யும் பதிவேடு ஒன்று 2019 இறுதிக் கணக்கு கள் தயாரிக்கும் போது சமர்ப்பிக்கின்றேன். |
| (ஆ) | 2016 திசெம்பர் 29 திகதிய 30/2016 ஆம் இலக்க பொது நிருவாக சுற்றறிக்கையின் பந்தி 3.1 | சபையின் 13 வாகனங் களின் எரிபொருள் எரிதல் பரிசோதனை மேற்கொண் டிருக்கவில்லை. | சுற்றறிக்கை யின் பிரகாரம் செயற்பட வேண்டும். | 5 வாகனங்களின் எரிபொருள் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு பூர்த்தி செய்துள்ளதுடன் மீதியான வாகனங்களில் எரிபொருள் பரிசோதனை கூடிய விரைவில் மேற்கொள்வேன். |
| (இ) | 2010 திசெம்பர் 27 திகதிய தபபா/ பபாகொ/2010/1 இலக்கங் கொண்ட தென்மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கையின் 05 ஆம் பந்தி | கடைகளின் வாடகை உடன்படிக்கைகள் 03 வருடங்களுக்கு ஒரு முறை நாளது வரை ஆக்கப்பட வேண்டும். எனினும் 18 கடைகள் தொடர்பாக அவ்வாறு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சுற்றறிக்கை யின் பிரகாரம் செயற்பட வேண்டும். | மித்தெனிய ராஜபக்ஷ சிறப்பு சந்தையின் 01-08 வரையான கடைகள் தவிர ஏனைய கடைகளு க்கான உடன்படிக்கை மேற்கொண்டிருந்ததுடன் மேற்கூறிய 08 கடைகள் தொடர்பாகவும் முதலமைச்சரின் அங்கீகாரம் கிடைத்த உடன் உடன்படிக்கை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுகளின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 19,982,789 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 21,428,629 தொகை ஆகக் காணப்பட்டது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| வருமான மூலம் | 2018 மதிப்பீட்டு வருமானம் | 2018 சிட்டையிடப்பட்ட வருமானம் | 2018 சேகரிக்கப்பட்ட வருமானம் | 2018 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | 2017 மதிப்பீட்டு வருமானம் | 2017 சிட்டையிடப்பட்ட வருமானம் | 2017 சேகரிக்கப்பட்ட வருமானம | 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரி மற்றும் வரி | 902,200 | 1,088,533 | 1,086,703 | 2,020 | 56,400 | 1,044,512 | 1,046,772 | 1,830 |
| வாடகை | 13,462,100 | 12,646,360 | 12,722,807 | 1,481,747 | 14,502,590 | 11,626,932 | 12,615,922 | 1,558,194 |
| அனுமதிப் பத்திரக் கட்டணம் | 724,050 | 1,217,419 | 1,218,119 | 48,950 | 1,528,200 | 1,517,396 | 1,577,896 | 49,650 |
| ஏனைய வரு மானங்கள் | 17,508,800 | 31,958,936 | 21,467,516 | 43,245,392 | 16,144,800 | 28,989,608 | 19,415,169 | 32,753,972 |
| மொத்தம் | 32,597,150 | 46,911,248 | 36,495,145 | 44,778,109 | 32,231,990 | 43,178,448 | 34,655,759 | 34,363,646 |

### 2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு ஜனவரி 01 திகதியில் உள்ளவாறு மொத்த வருமான நிலுவை ரூபா 34,363,646 தொகையாக இருந்ததுடன் ஆண்டிற்கான சிட்டையிடல் ரூபா 46,911,248 தொகையாகக் காணப்பட்டது. இதன் பிரகாரம் ஆண்டின் போது அறவிடப்பட வேண்டிய ஒட்டு மொத்த வருமானம் ரூபா 81,274,894 தொகை எனினும் ஆண்டின் போது சேகரிக்கப்பட்டிருந்த வருமானம் ரூபா 36,495,145 தொகையாகக் காணப்பட்டமையால், வருமானம் சேகரிக்கும் முன்னேற்றம் 45 சதவீதம் காணப்பட்டது. | நிலுவை வருமானம் அறவிடப்பட வேண்டும். | நிலுவை முத்திரைக் கட்டணம் மற்றும் நிலுவை நீர்க் கட்டணம் காரணமாக நிலுவை வருமான சதவீதம் அதிகரித்திருந்தது. |

**2.2.3 வீதவரி மற்றும் வரி**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2004 ஜுன் 22 ஆம் திகதிய 1346/9 ஆம் இலக்க அதி விஷேட வர்த்தமானியின் மூலம் முன்னேற்றப்பட்ட பிரதேசங்கள் பிரசுரிக்கப்பட்டிருந்த போதிலும், பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவு 134 இன் பிரகாரம் வீதவரி விதிக்கப்பட்டு அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வீதவரி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஆதனங்களை பெறுமதி மதிப்பீடு செய்வதற்காக பெறுமதி மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு அறிவித்திருந்ததுடன் பெறுமதி மதிப்பீட்டு அறிக்கை கிடைத்த பின்னர் தேவையான தொடர் நடவடிக்கை எடுப்பேன். |

**2.2.4 வாடகை**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சபைக்கு சொந்தமான 15 கடைகளில் இருந்து கிடைக்க வேண்டிய கடை வாடகை ரூபா 431,350 தொகை மற்றும் பிரதான பணம் ரூபா 9,924,333 தொகையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவை வாடகை அறவிடப்பட வேண்டும். | நிலுவை தொகையில் ரூபா 1,035,950 தொகை அறவிடப்பட்டுள்ளதுடன் மிகுதியை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ஆ) | மீளாய்வாண்டின் போது சபைக்குச் சொந்தமான மித்தெனிய வாகன தரிப்பிடத்தை வாடகைக்கு கொடுத்ததன் மூலம் பெற வேண்டிய ரூபா 106,750 தொகையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவை வாடகை அறவிடப்பட வேண்டும். | நிலுவை தொகையை அறவீடு செய்வதற்காக வாடகையாளருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. |

### 2.2.5 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத் தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் 2018 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெறவேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் முறையே ரூபா 1,983,923, ரூபா 35,595,163 தொகைக் காணப்பட்டது. | நிலுவை நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் அறவிடப்பட வேண்டும். | 2018 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப் பணத்தில் ரூபா 1,675,323 தொகையும் முத்திரைக் கட்டணத்தில் ரூபா 324,677 தொகையும் அறவிடப்பட்டன. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் மக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவை மற்றும் பொது பாதைகள் மீதான கருமங்களை முறைப்படுத்தலும் கட்டுப்படுத்துதலும் பொதுமக்களின் சுகபோக வாழ்க்கை, வசதிகள் மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செய்பணிகளை நிறைவேற்றுவது தொடர்பாக கண்டறியப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

#### (அ) திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோக த்தரின் கருத்துரை |
|---|---|---|
| தேசிய சுற்றாடல் சட்டம் தொடர்பாக 2000 இன் 53 ஆம் இலக்க புதிய வர்த்தமானி திருத்தத்தின் படி வெளியிடப்பட்ட 2008 ஜனவரி 25 திகதிய 1553/16 ஆம் இலக்கம் கொண்ட அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தல் களுக்கு இணங்க கழிவுப் பொருள் முகாமைத்துவத்திற்காக சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெற்றிருக்கவில்லை. | சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெற வேண்டும். | குறைப்பாடுகள் சரிசெய்த பின்னர் 2019 ஏப்ரல் 30 திகதி சுற்றாடல் அனுமதிப் பத்திரம் பெற்றுக் கொள்வதற்கு விண்ணப்பம் ஒன்று சமர்ப்பிக்கப்பட்டது. |

### (ஆ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்திக்கான 2030 நிகழ்ச்சி நிரலின் நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளுக்கான உலகளாவிய சுட்டிகளின் மூலம் சபையின் அதிகாரப் பிரதேசத்தின் பொது மக்களின் வாழ்க்கைத் தரம் மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கான நீண்ட காலத் திட்டங்கள் சபையினால் தயாரித்திருக்கவில்லை. | நிலைபேறான அபி விருத்தி குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளை அளவீடு செய்வதற்கான சுட்டிகளை இனங்கண்டு அதன் பிரகாரம் வருடாந்த இலக்குகளை நெருங்கும் முன்னேற்றத்தை அளக்க வேண்டும். | பாதீட்டின் மூலம் பணம் ஒதுக்கப்பட்டு பிள்ளைகளின் மற்றும் தாய்மார்களின் போசாக்கினை மேம்படுத்துதல், நோய் தடுப்பு ஆகிய நிகழ்ச்சித் திட்டங்கள் மேற்கொள்ளப்படுவதுடன் இவ் விடயங்கள் தொடர்பான திட்டங்களை நான்கு ஆண்டு திட்டத்தில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளேன். |

## 3.2 மனித வள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையின் மிகை ஊழியர் 02 பேரை முறைப்படுத்துவதற்கும், 21 பேரின் வெற்றிடங்கள் நிரப்புவதற்கும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பதவியணியின் மிகைப் பதவிகளை முறைப் படுத்துதல் வெற்றிடங்களை நிரப்புதல் மேற்கொள்ளப் பட வேண்டும். | கனிஷ்ட சேவையில் காணப்படும் வெற்றிடங்கள் 07 பதவிகள் தொடர்பாக ஆட்சேர்ப்பு தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ள துடன் மிகைப் பதவி ஒன்றிற்காக 25/2014 சுற்றறிக்கையின் மூலம் நியமனம் வழங்கப்பட்டுள்ளதுடன் மருத்துவ காரணங்களினால் சேவையை விட்டு சென்றிருந்த ஆள் ஒருவரை மீண்டும் சேவையில் அமர்த்தியமையால் மேலும் ஒரு பதவியில் மிகை ஒன்று காணப்பட்டது. |
| (ஆ) | சபையின் 16 ஊழியர்கள் அங்கீகரிக்கப்பட்ட கடமைகளுக்கு புறம்பாக கடமைகளில் ஈடுபடுத்தியிருந்தனர். | அங்கீகரிக்கப் பட்ட கடமைகளில் ஈடுபடுத்த வேண்டும். | எதிர்காலத்தில் அவ்வாறான குறைபாடுகள் ஏற்படாத முறையில் நடவடிக்கை எடுப்பேன். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | சேவையை விட்டுச் சென்றுள்ள, இறந்துள்ள, இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள 10 உத்தியோகத்தர் களிடம் அறவிடப்பட வேண்டிய கூட்டுப்பெறுமதி ரூபா 589,068 தொகையினை அறவீடு செய்வதற்காக மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ஊழியர் கடன் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள உத்தியோகத்தர்களிடம் அறவிடப் பட வேண்டிய கடன்மீதிகளை முத்திரைக் கட்டணத்தில் இருந்து தீர்ப்பதற்கு பிரதான செயலாளரினால் வெளியிடப்பட்ட கடிதத்தின் மூலம் அறிவித்திருந்த துடன், சேவையை விட்டுச் சென்றுள்ள உத்தியோகத்தர் களிடம் அறவிடப்பட வேண்டிய பணத்தை செலுத்துமாறு ஞாபகக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. |

## 3.3 செயற்பாட்டுத் திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோக த்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மித்தெனிய மற்றும் கிரம 32 கடைகளுக்காக 2012 மற்றும் 2014 ஆண்டுகளின் போது பெறுமதி மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் வழங்கியிருந்த பெறுமதி மதிப்பீடு, தொடர்ந்து வரும் 2 வருடங்களுக்கு மாத்திரம் செல்லுபடியாகும் என குறிப்பிடப்பட்டு இருந்த போதிலும் மீளாய்வாண்டின் போதும் அந்தப் பெறுமதி மதிப்பீட்டின் அடிப்படையில் கடை வாடகை அறவிடப்பட்டிருந்தது. | புதிய பெறுமதி மதிப்பீடு ஒன்றினை பெற்று கடை வாடகை அறவிடப்பட வேண்டும். | புதிய பெறுமதி மதிப்பீடு பெற்றுத் தருமாறு கோரியிருந்த போதிலும் இது வரை பெறுமதி மதிப்பீட்டு அறிக்கையொன்று கிடைத்திருக்கவில்லை. |
| (ஆ) | சபைக்குச் சொந்தமான 9 சந்தைகளை டென்டர் மூலம் வாடகைக்கு கொடுப்பதற்காக நடவடிக்கை எடுக்காமல் கமிஷன் வழங்கும் அடிப்படையில் சேர்க்கப்பட்டிருந்த 06 ஊழியர்களை ஈடுபடுத்தி சந்தை வாடகை அறவிடப்பட்டிருந்தது. | நிலுவை வருமானம் முறையாக அறவீடு செய்வதற்காக சபைக்கு சொந்த மான சந்தைகளை டென்டர் மூலம் வாடகைக்கு கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | சந்தைகளுக்காக நேர்வேலை அடிப்படையில் வாடகை அறவீடு செய்வதற்காக முதலமைச்சரின் அங்கீகாரம் 2010 ஆகஸ்ட் 16 திகதி கடிதத்தின் மூலம் கிடைத்திருந்த போதிலும், 2019 ஆண்டின் போது நேர்வேலை அடிப்படையில் வாடகை அறவீடு செய்வதற்கு சபை தீர்மானித்திருந்தது. |

## 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.4.1 பராமரிப்பு மற்றும் திருத்தம் மேற்கொள்ளப்படாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபைக்குச் சொந்தமான 08 வாகனங்கள் நீண்ட காலமாக செயற்படாமல் காணப்பட்டதுடன், அவற்றை திருத்துவதற்கு அல்லது அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை. | செயற்படாமல் காணப்படும் வாகனங்களை திருத்துவதற்கு அல்லது அப்புறப்படுத்து வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | RC-7796 இலக்க டிரக்டர் பயன்படுத்தப்படுவதுடன், 270-0429 டிரக்டர் வண்டியை திருத்துவதற்காக உரிய நடவடிக்கைகள் எடுக்கப் படுகின்றது. 02 கைடிரக்டர்களை சபைக்கு உரித்தாக்கி ஏலவிற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதுடன், மூன்று நீர் பவுசர் உடற்பகுதிகளை எதிர்காலத்தில் ஏல விற்பனை செய்வதற்கும் நடவடிக்கை எடுப்பேன். |

### 3.4.2 உரித்தாக்கப்படாத சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையின் தேவைக்கு பயன்படுத்தப் படும் 09 வாகனங்கள் மற்றும் 57 மயானங்கள் சட்ட ரீதியாக உரிமை 2018 திசெம்பர் 31 திகதி வரை உரித்தாக்கியிருக்கவில்லை. | சொத்துக்களை உரித்தாக்கு வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | உரித்தாக்கியிருக்காத வாகனங்களில் இலக்கம் 53-1634 கொண்ட வாகனத்தினை உரித்தாக்குவதற்காக நடவடிக்கை எடுக்கப்படுகின்ற துடன், மயானங்களை உரித்தாக்கித் தரும்படி கடுவன மற்றும் வலஸ்முள்ள பிரதேச செயலகங்களுக்கு அறிவிக்கப் பட்டுள்ள போதிலும் இது வரை உரித்தாக்கியிருக்கவில்லை. |

### 3.4.3 விளைவற்ற/ குறை பயன்பாட்டுச் சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2015 ஆண்டின் போது சபைக்கு ஒப்படைத்திருந்த ரூபா 9,984,179 தொகை பெறுமதியான கட்டுவன வாராந்த சந்தைக் கட்டிடம் 04 வருட காலம் முதல் செயற்படாமல் காணப்பட்டது. | சொத்துக்களை பயன்படுத்து வதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். | பொது வசதிகள் மற்றும் பாதுகாப்பு வேலி காணப்படாமையால் சந்தை திறக்கப்படாததுடன் 2019 ஆண்டின் போது சந்தையை திறப்பேன். |

**4. கணக்களிக்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 02 செலவு விடயங்கள் பாதீட்டு வரையறையை மிகைத்து ரூபா 328,711 இற்கான செலவுகள் மேற்கொள்ளப் பட்டிருந்ததுடன் அவை 42 சதவீதம் முதல் 50 சதவீத வீச்சில் காணப்பட்டது. | நடைமுறை சாத்தியமாக மதிப்பீடு தயாரிக்க வேண்டும். | இவ்வாறான தவறுகள் ஏற்படாத விதமாக செயற்படுவேன். |
| (ஆ) | 02 செலவு விடயங்களில் கூட்டுத்தொகை ரூபா 2,920,149 இற்கான சேமிப்புக்கள் காணப்பட்ட துடன், அவை 39 சதவீதம் முதல் 45 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது. | நடைமுறை சாத்தியமாக மதிப்பீடு தயாரிக்க வேண்டும். | இவ்வாறான தவறுகள் ஏற்படாத விதமாக செயற்படுவேன். |
| (இ) | 03 வருமான விடயங்களின் பிரதிகூலமான முரண்களின் கூட்டுத்தொகை ரூபா 8,790,530 தொகையாகக் காணப்பட்டதுடன் அவை 06 சதவீதம் முதல் 18 சதவீதம் வரை வீச்சில் காணப்பட்டது. | நடைமுறை சாத்தியமாக மதிப்பீடு தயாரிக்க வேண்டும். | இவ்வாறான தவறுகள் ஏற்படாத விதமாக செயற்படுவேன். |